மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

வெள்ளி ரதம்

***578—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சி ஒன்றியம், அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்ட இடம் துலங்கவரும் பொன்மனத் தாய், கால் பட்ட இடமெல்லாம் கருணை நிறைந்து நிற்கும் தர்மத் தாய், தமிழகத்திற்குத் தேவையான உரிமைகளை மீட்டெடுப்பதில் வல்லமை படைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் பதிலைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில், 809 திருக்கோயில்களுக்கு சொந்தமாக 989 மரத் தேர்கள் உள்ளன. மேலும் 52 திருக்கோயில்களில், தங்க ரதமும், 42 திருக்கோயில்களில் வெள்ளி ரதமும் பக்தர்களின் வழிபாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் 144 திருக்கோயில்கள் ரூ.16.24 கோடி செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், படவேடு, அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலுக்கு மரத் தேர் உபயப் பணியாக செய்யப்பட்டு, செப்புத் தகடு போர்த்தும் பணி முடிவடைந்துள்ளது. வெள்ளித் தேர் அமைக்க உபயதாரர்கள் முன்வந்தால், விதிகளின்படி வெள்ளி ரதப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வளம் பெற, தமிழர்கள் நலம் பெற, தாய் உள்ளத்தோடு தொண்டாற்றும் கருணையின் திரு உருவம், நான் எந்நாளும் வணங்கும் தெய்வத்தின் மறு உருவம், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் ஒட்டுமொத்த வடிவமாகக் காட்சிதரும் தியாகத் திருவுருவம், எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிய எண்ணத்தை, கண்ட கனவை, கொண்ட கொள்கைகளை பின்பற்றிய இலட்சியத்தை, அணையா தீபமாகப் பாதுகாக்கும் பேராற்றல் பெற்ற தனிப்பெரும் தலைவி எங்கள் தாய். கடைகோடித் தொண்டனையும், தனது கருணைப் பார்வையால் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கம் எங்கள் அன்னை. ஒரு பார்வையால், ஒரு வார்த்தையால் எதிரிகளை இடம் தெரியாமல் விரட்டியடிக்கும் ஆற்றல்மிக்க தனிப்பெரும் தலைவியின் தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) வீறுநடைபோடும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடானுகோடி தொண்டர்களில் ஒருவனாக மாண்புமிகு அம்மா அவர்களின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் கடைநிலைத் தொண்டனான என்னையும், மாட்சிமை

பொருந்திய இந்த மாபெரும் அவையினில் அமர வைத்தது நான் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையினால்தான். 'சான்றோர் நிறைந்த தொண்டை நாடு' என சங்க காலத்தில் போற்றப்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தில், வளமிக்க செய்யாற்றின் கரையோரம் செழித்திருக்கும் கலசப்பாக்கம் தொகுதியில், 'அம்மா' என்னும் மூன்றெழுத்து மந்திரச் சொல்லை உச்சரித்ததால் மட்டுமே இந்த மாபெரும் அவைக்கு இந்த சாதாரண தொண்டனால் வர முடிந்திருக்கிறது. அதற்காக எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல எத்தனை ஜென்மம் எடுத்தாலும் போதாது. தமிழகத்தைக் காத்தருளும் மாண்புமிகு அம்மா அவர்கள் அமர்ந்திருக்கிற இந்தப் புனிதமான அவையில், அம்மாவை வணங்கிக்கொண்டிருக்கும் வாய்ப்பு கிடைத்திருப்பது என் வாழ்நாளின் பெரும் பயனாகக் கருதுகின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில்தான் தமிழகத்தில் பல ஆலயங்களில் திருப்பணிகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன. நூற்றுக்கணக்கான ஆலயங்களில் அன்னதானம் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த 'ஒருகால பூஜை' திட்டத்தினால் பல ஆலயங்களில் விளக்கு எரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட படவேடு கி.பி. 1236 முதல் கி.பி. 1379 வரை ஆண்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

2016 ஆகஸ்ட் 8]

திரு. வி. பன்னீர்செல்வம்: இப்பகுதி சம்புவராய மன்னர்களால் ஆளப்பட்டு, மருது எஸ்டேட் படைவீடு, படைவீடு ராஜ்ஜியம், படைவீடு உசாவாடி என்று வரலாற்றுப் பெயர்கள் கொண்ட படைவீட்டில் எழுந்தருளி அருள்புரியும் அன்னை ஸ்ரீரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் முன்வந்தால் வெள்ளித் தேர் செய்து தரப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். பல உபயதாரர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் என்னைச் சந்தித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வெள்ளித் தேர் செய்து தர விருப்பம் தெரிவித்துள்ளார்கள். எனவே, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், வெள்ளித் தேர் செய்து தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலசப்பாக்கம் தொகுதி, படவேடு ஊராட்சி ஒன்றியத்தில், அருள்மிகு படவேடு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் வெள்ளி ரதம் செய்து தர முன்வருவதாகத் தெரிவித்துள்ளார்கள். அவ்வாறு அவர்கள் முன்வரும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, வெள்ளி ரதம் செய்து தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகராட்சியையொட்டியுள்ள ரத்தினப்பள்ளி ஊராட்சியிலே, ஸ்ரீ ஆஞ்சநேயர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இருக்கிறது. அந்தத்

திருக்கோயிலுக்குச் சொந்தமாக சுமார் 70 ஏக்கருக்கு மேல் நிலமிருக்கிறது. அந்தக் திருக்கோயிலில் ஆண்டு முழுவதும் 2,000-க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் நன்றாக கேள்வி கேட்பீர்கள். கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: ஆண்டு முழுவதும் 2,000-க்கும் மேற்பட்ட திருமணங்கள் அங்கே நடைபெறுகின்றன. அதுமட்டுமில்லாமல், ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே இப்போது என்ன நிலைமை என்று சொன்னால், அந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான 70, 80 ஏக்கர் நிலங்களை தனியார் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அந்தக் திருக்கோயிலின் நிலத்தைப் பாதுகாத்திடும் வகையில், அங்கே, சுற்றுச் சுவரைக் கட்டிட வேண்டும்; அந்தத் திருக்கோயிலின் மத்தியில் இருக்கக்கூடிய குளத்திலே நீரை நிரப்ப வேண்டும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்ற வகையிலே அந்தத் திருக்கோயிலைச் சீரமைத்து, குடமுழுக்கு செய்திட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்டுள்ள கேள்வி, மூல வினாவிற்குத் தொடர்புடையது அல்ல. எனவே, தனிக் கேள்வி போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]